# SOURCE MATERIAL FOR MODEL I PAPER II

## QUAD முதல் உச்சி மாநாடு

'Quadrilateral Security Dialogue' – என்பதன் சுருக்கமே QUAD. தமிழில் இது 'நான்கு நாடுகள் பாதுகாப்பு பேச்சுவார்த்தை' என்று அழைக்கப்படுகிறது. முக்கிய உளவுச் செய்திப் பரிமாற்றம் மற்றும் கூட்டு இராணுவப் பயிற்சிக்கு உற்சாகத்துடன் முனைப்பு காட்டும் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகள் இந்த கூட்டமைப்பின் உறுப்பினர்கள்.

2021 மார்ச் 12 அன்று, இணையம் வழியாக QUAD அமைப்பின் முதல் உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் நரேந்திர மோடி (இந்தியா), ஸ்காட் மாரிசன் (ஆஸ்திரேலியா), யோசிஹிட் சுகா (ஜப்பான்), ஜோ பைடன் (அமெரிக்கா) ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் முதல் நேரடி மகாநாடு, 2021 செப்டம்பர் 24 அன்று அமெரிக்காவில் நடைபெற்றது.

2022-ஆம் ஆண்டுக்குள் இந்தோ பசிபிக் பகுதி முழுவதும் 100 கோடி கோவிட்-19 தடுப்பூசிகள் வழங்குவதற்கு உறுப்பு நாடுகள் உறுதி எடுத்துக் கொண்டன. இது, இந்த மண்டலத்தில் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிரான தடுப்பூசி ராஜதந்திரம் என்று கூறப்படுகிறது.

**இந்தோ-பசிபிக்**

இன்று உலகின் அதிமுக்கிய ராஜதந்திர பகுதியாக மாறியுள்ளது இந்தோ-பசிபிக் மண்டலம். சினாவின் ஆதிக்க மனோபாவமே அமெரிக்கா உட்பட பல நாடுகளை இந்த மண்டலத்தை நோக்கி நகரச் செய்துள்ளது. QUAD, இந்த ராஜதந்திர நடவடிக்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**துவக்கம்:** 2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி, 14 நாடுகளிலாக சுமார் 2,27,898 பேரை காவு கொண்டது. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும், புனர் வாழ்வுக்காகவும் நான்கு நாடுகள் இணைந்து சுனாமி உதவிக்கான 'கோர் குரூப்' ஒன்றை உருவாக்கின.

அன்றைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் அவர்களே இந்த கோர் குரூப் உருவாக்கத்திற்கு துவக்கமிட்டவர். பேரிடர் நிவாரணத்திற்காக உருவான இந்த 'அதிகாரபூர்வமற்ற' கூட்டணி, பிற்பாடு ராஜதந்திர செயல்பாடுகளுக்கான ஒரு பாதையாக மாறியது.

வரலாற்று ஆச்சரியங்களில் ஒன்று. மண்டல ரீதியாக முளைவிட்ட சவால்களை எதிர்கொள்ளும் திறன்படைத்த அதிகாரபூர்வமற்ற கூட்டணி என்னும் தளத்துக்கு இதை எடுத்துச் சென்றவர் அன்றைய ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ ஆபே ஆவார்.

2006-இல் ஷின்ஸோ ஆபே Arc of Freedom and Prosperity என்னும் கருத்தாக்கத்தை அறிவித்தார். இதையடுத்து QUAD அமைப்புக்கான புவியியல்

எல்லைகள் பற்றிய ஒரு வடிவம் உருவானது. தனது டோக்கியோ பயணத்தின்போது, அன்றைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் ஆசியா-பசிபிக் மண்டலத்தில் ஒத்துணர்வு கொண்ட பிற நாடுகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்ய இந்தியாவும், ஜப்பானும் தயாராக இருப்பதாக தெரிவித்தார். 2007-இல் இது குறித்து கருத்துப் பரிமாற்றம் நடத்த தயாராக இருப்பதாக அமெரிக்காவும் குறிப்பிட்டதை அடுத்து, ராஜதந்திர நடவடிக்கைகள் வேகமெடுத்தன.

தொடர்ந்து 2007-இல் அமெரிக்க துணை அதிபர் டிக்செனீ, QUAD-இன் சாத்தியங்களைக் குறித்து, ஆஸ்திரேலிய பிரதமர் ஜான் ஹோவார்டுடன் கலந்து ஆலோசித்தார். அதன்பின் ஹோவர்டும், இந்திய அயலுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் ஜப்பான் விஜயம் செய்தனர். இத்துடன் ஆபேயின் இந்தியா-அமெரிக்கா பயணங்கள், முதல் நான்கு நாடுகள் மகா நாட்டிற்கான ஒப்பந்தத்தை உறுதி செய்தது. 2007-இல் QUAD-இன் துவக்கநிலை மகாநாடு நடைபெற்றது.

இந்நிலையில் QUAD குறித்து சீனா, அதிகாரபூர்வமாக தனது அதிருப்தியை (demarche) வெளியிட்டது. இந்நிலையில் QUAD-க்கு சுக்கான்பிடித்த ஜப்பான் பிரதமர் ஆபோ அவர்களின் ராஜினாமா, கூட்டமைப்பை தடுமாற வைத்தது. 2007-இன் இறுதியில் பதவிக்கு வந்த ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரட் அரசு, QUAD தங்களது ராஜதந்திர பார்வைக்கு ஏற்றதல்ல என்று அறிவித்தது. இந்த சூழல் மாற்றம் **QUAD1.0**-வுக்கு முட்டுக்கட்டையானது.

எனினும் பத்து வருட கால இடைவேளையில் இந்த நான்கு நாடுகளுக்கும் இடையிலான உறவு ‘பக்குவமடைந்தது’. இந்தோ-பசிபிக் மண்டலத்தின் ராஜதந்திர சம உரிமை கேள்விக்குள்ளானது. இந்த நான்கு நாடுகளையும் கவலை கொள்ள வைத்தது. புதிய ‘மினிலாட்டரல்’ நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக QUAD 2.0-இக்கான பாதை உருக்கொண்டது.

இந்த கூட்டமைப்பு உருவாக்கத்தில் இந்தியாவும், ஜப்பானும் முக்கிய பங்கு வகித்தன. ஜப்பான்-இந்தியா-அமெரிக்கா கூட்டமைப்பு, 2011-இல் துணைச் செயலர் மட்டத்தில் துவங்கி, அமைச்சர்கள் மட்டத்துக்கு வளர்ந்தது. ஜப்பான்-இந்தியா-ஆஸ்திரேலியா கூட்டணி 2015-இல் துவங்கியது. இந்தியா-ஜப்பான்-அமெரிக்கா ஆகிய நாடுகளின் 2+2 பாதுகாப்பு, வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சு வார்த்தைக்கு இணையான ஒரு மகாநாடு, 2017-இல் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.

2015-இல் இந்தியா-அமெரிக்கா இடையே பாதுகாப்பான தகவல் பரிமாற்ற ஒப்பந்தம் (COMCASA), லாஜிஸ்டிக்ஸ் எக்ஸேஞ்ச் மெமோராண்டம் (LEMOA) ஆகியவை கையெழுத்தாயின. 2017-இல் மிக முக்கியமான ஜப்பான்-இந்தியா சிவில் அணு ஒத்துழைப்பு ஒப்பந்தம் நிறைவேறியதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு நெருக்கமானது. நான்கு நாடுகளுக்கு இடையிலான உறவு, மூன்று நாடுகள் கூட்டு இராணுவப்பயிற்சி ஆகியவை இந்நாடுகளுக்கிடையேயான உறவை படிப்படியாக வளர்த்தது.

**சீனா என்னும் சிக்கல்**

**இந்தியா**

- நிரந்தர எல்லைப் பிரச்சனை.
- இந்தியப் பெருங்கடலில் சீன கடற்படையின் அத்துமீறிய மேலாதிக்கம்.
- 2019-இல் சீன அணுநீர் மூழ்கி இந்தியப் பெருங்கடலில் உலாவியது.

**ஜப்பான்**

- எல்லைப் பிரச்சனை.
- வரலாற்று ரீதியான பகைமை.
- ஸென்காகு, டயோயூ தீவுகளைக் குறித்த உரிமை.

**ஆஸ்திரேலியா**

- ராஜதந்திரம், பாதுகாப்பு, வாணிப, வியாபார பிரச்சனை.
- தென் சீனக்கடல் மீதான சீனாவின் ஏகபோக உரிமைவாதத்தை தள்ளுபடி செய்த சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை சீனா ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டது என்று தெரிவித்த உலகின் முதல் நாடு ஆஸ்திரேலியா.
- 5G நெட்வொர்க்கில் பங்கெடுப்பதிலிருந்து Huawai நிறுவனத்தை விலக்கிய முதல்நாடு ஆஸ்திரேலியா.

**அமெரிக்கா**

- பாதுகாப்பு, பொருளாதாரம், வாணிபம், தொழில்நுட்பம், சைபர், விண்வெளி, அறிவியல்.

இந்நிலையில் 2012-இல் மீண்டும் ஜப்பான் பிரதமராக பதவிக்கு வந்த ஆபே, Democratic Security Diamond என்று நான்கு நாடுகளின் நெருக்கத்தை பெருமையாக குறிப்பிட்டார். தொடர்ந்து நான்கு நாடுகளின் துணைச் செயலர் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் 2017 நவம்பரில் மணிலாவில் நடைபெற்றது செப்டம்பரில் அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தது.

2021 மார்ச் 12-ஆம் தேதி நடைபெற்ற மெய்நிகர் மகாநாட்டில் வெளியிடப்பட்ட 'Sprit of the QUAD' ஒரு முக்கிய மைல் கல். சுதந்திரமான இந்தோ-பசிபிக் மண்டலம், கோவிட் மற்றும் காலநிலை மாற்ற பாதிப்புகளை ஒன்றிணைந்து எதிர் கொள்வது போன்றவை இந்த அறிவிப்பில் இடம் பெற்றிருந்தன. இந்தோ-பசிபிக் மண்டலத்தின் மையப்புள்ளி 'ஏசியான்' (ASEAN) என்று QUAD அங்கீகரித்தது.

'சீனாவில் சவால்களை எதிர் கொள்வது' என்பதே 'குவாட்'-இன் உண்மையான நோக்கம் என்று வல்லுனர்கள் கருதுகின்றனர். இதை 'மினி நேட்டோ' என்று சீனா விமர்சிக்கிறது.

# தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு

சுதந்திரம் பெறுவதற்கு முன்பான பிரிட்டிஷ் காலனிய ஆட்சி வரலாற்றிலேயே இன்றைய இந்திய ஜனநாயகத்தின் தொடக்கப் புள்ளிகளைக் காணலாம். 1861-லேயே மத்திய அரசாங்கத்திலும் மாகாணங்களிலும் ஆலோசனை மன்றங்கள் அமைக்கப்பட்டன. 1892, 1909 ஆண்டுகளில் அவையே விரிவுபடுத்தப்பட்டன. இவற்றில் இடம்பெற்ற மக்கள் பிரதிநிதிகள் நேரடித் தேர்தலின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் பட்டதாரிகள், வணிகர்கள், உள்ளாட்சி அங்கத்தினர்கள் ஆகிய அமைப்புகளின் வழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதிகாரிகள் இல்லாத உறுப்பினர்கள் என்பதுதான் அதன் உண்மையான அர்த்தம். அதுவும்கூட மொத்த எண்ணிக்கையில் பாதியளவுக்கு மட்டும்தான். 1919 சீர்திருத்தங்கள்தான் சட்டமியற்றும் சபை என்ற அடிப்படையில், இந்தியர்களுக்கு ஆட்சி நிர்வாகத்தில் குறிப்பிட்ட அளவு பொறுப்பாட்சியை வழங்கியது. அதன் அடிப்படையில்தான் 1921-ல் ஒன்பது மாகாணங்களில் புதிய சட்டமன்றங்கள் (Legislative council) உருவாக்கப்பட்டன.

1892இல் பொருளாதாரத்தில் முன்னேறிய சாதிகள் மட்டுமே பயன்பெற்றன. 1909இல் சீர்திருத்தம் குறிப்பாக பிராமணரல்லாத உயர்சாதிகளுக்கும் மதச்சிறுபான்மையினருக்கும் அரசியல் வாய்ப்புகளை உருவாக்கியது. 1919இல் மாண்ட்பொர்டு சீர்திருத்தங்கள் அதை இன்னும் விரிவுபடுத்தி ஆட்சிப் பொறுப்பையே அவர்களின் கையில் வழங்கியது. மாகாணங்களில் ஆட்சி நிர்வாகத்தின் தலைவராக ஆளுநரை ஏற்றுக்கொண்டு, சட்டமியற்றும் நடவடிக்கைகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடம் வழங்கியது. அதற்குக் காரணமாக இருந்தவர் அன்றைய இந்தியச் செயலர் மாண்டேகு. அவர் பரிந்துரைத்த சீர்திருத்தங்களை ஆங்கிலேய அதிகார வர்க்கத்தினர் விரும்பவில்லை. முதலாவது உலகப் போரில் இங்கிலாந்தின் வெற்றிக்காக இந்தியர்கள் சிந்திய ரத்தமும்கூட, இந்த ஜனநாயக வாய்ப்பை விரைவுபடுத்தியது.

மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள் அரசியல் பரிசோதனையாகத்தான் மேற்கொள்ளப்பட்டன. ஏனெனில், அதற்கு முன்பாக அப்படியொரு பொறுப்பாட்சி முறை இங்கு நடைமுறையில் இருந்ததில்லை. மத்திய அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டிலிருந்து மாகாண அரசாங்கங்கள் விடுபட்டுத் தமக்குப் பொறுப்புள்ள துறைகளில் சுயமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளில் இந்தியர்கள் பெற்றிருந்த அனுபவங்களின் அடிப்படையிலேயே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், மாகாண அரசாங்கத்தின் முழுமையான அதிகாரங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. ஒரு பகுதி அமைச்சரவையிடமும் மற்றொரு பகுதி வழக்கம்போல ஆளுநர் தலைமையிலான நிர்வாக அவையிடமுமே இருந்தன. அமைச்சரவையின் பொறுப்பில் இருந்த துறைகள் மாற்றப்பட்ட துறைகள் எனவும் ஆளுநரின் பொறுப்பில் இருந்த துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும் வகைப்படுத்தப்பட்டன.

ஒதுக்கப்பட்ட துறைகளில் நிதி, நீதி, நீர்ப்பாசனம், தொழிற்சாலைகள் உள்ளிட்ட முக்கியத் துறைகள் இருந்தன. மாற்றப்பட்ட துறைகளில் கல்வி, நூலகம், உள்ளாட்சி, மக்கள் நல்வாழ்வு, சுகாதாரம், மத விவகாரங்கள், அறநிலையங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய துறைகள் இருந்தன. இரு வகைகளாகப் பிரிக்கப்பட்ட துறைகளுக்கு இடையே ஒருங்கிணைவு இல்லை என்பது ஒரு குறையாக இருந்தது. எனினும், இரண்டுக்கும் பொதுவாக ஒரே வரவு-செலவுத் திட்டம்தான் பின்பற்றப்பட்டுவந்தது. இந்த இரட்டையாட்சி வாய்ப்பின் வழியாக 1921இல் சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் அவர்களின் அமைச்சரவைகளும் ஆட்சி நிர்வாகத்தில் தங்களது திறமையை நிரூபித்து, அடுத்தடுத்த அரசியல் சீர்திருத்தங்களுக்கும் அடிகோலினர். குறிப்பாக, சென்னை மாகாணத்தில் ஆட்சிக்கு வந்த நீதிக் கட்சி கல்வி, சமய நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல் இரண்டிலும் தனது கொள்கையை வலுவாக நிறுவியது.

1919ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தத்தின்படி சென்னையில் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தில் 98 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் 25 நியமன உறுப்பினர்களும் இருந்தனர். சட்டமன்றத்தின் பதவிக்காலம் மூன்றாண்டுகள். எனினும், ஆளுநர் சட்டமன்றத்தை முன்கூட்டியே கலைக்கவோ பதவிக்காலத்தை நீட்டிக்கவோ அதிகாரம் பெற்றிருந்தார். இன்று நடைமுறையில் இருக்கும் மாநில ஆளுநர்களின் அதிகாரங்களுக்கும் இரட்டையாட்சியே வித்திட்டது என்றும் சொல்லலாம். மாகாணச் சட்டமன்றத்தில் இயற்றப்படுகிற சட்டங்களை கவர்னர் ஜெனரலின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கும் அதிகாரமும் ஆளுநரின் வசமிருந்தது. கவர்னர் ஜெனரலின் இடத்தில் இன்று குடியரசுத் தலைவர் இருக்கிறார். இத்தனை நெருக்கடிகளுக்கு நடுவிலும் ஆளுநரின் நிர்வாக அவைக்கும் அமைச்சரவைக்குமான இணைப்புக் கூட்டங்களை இணக்கத்துடன் நடத்திய மாகாணமாக சென்னை பெருமைபெற்றது.

1921-ல் சென்னை மாகாணம் மட்டுமின்றி வங்காளம், பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப், பிஹார், ஒரிஸா, மத்திய மாகாணங்கள், அசாம் ஆகிய மாகாணங்களிலும் இரட்டையாட்சி நடைமுறைக்கு வந்தது. ஏறக்குறைய 16 ஆண்டு காலம் அது நடைமுறையில் இருந்தது. பின்பு, 1935ஆம் ஆண்டு சிர்திருத்தங்களின்படி மாகாண சுயாட்சி வழங்கப்பட்டு, அது 1937இல் நடைமுறைக்கு வந்தது. அதன் காரணமாக சட்டமன்றப் போரவை (Legislative assembly) தொடங்கப்பட்டது.